Dinathanthi
8- May- 2008



எறி பந்து போட்டியில் வெற்றிப்பெற்ற முருகன்புதூர் அணிக்கு கோப்பையை ஊராட்சி மன்ற தலைவர் வேலுமணி வழங்கிய போது எடுத்த படம்.

# கிராம புத்துணர்வு விளையாட்டு போட்டிகள்

கோபிசெட்டிபாளையம், மே.8-

கோபி சுற்றுப்புற கிராமங்களில், கிராம புத்துணர்வு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## விளையாட்டு போட்டிகள்

கோவை ஈஷா யோகமையத்தின் கிராம புத்துணர்வு இயக்கத்தின் சார்பில், ஆண்டுதோறும் கிராமங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2008-ம் ஆண்டிற்கான விளையாட்டு போட்டிகள் கோபி மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் உள்ள கிராமங்களில் நடைபெற்றன. இந்த போட்டிகளின் கால் இறுதி போட்டி, அரையிறுதி போட்டி மற்றும் இறுதி போட்டிகள் கோபி அருகில் உள்ள புதுக்கரைப்புதூரில் நடைபெற்றது.

இந்த போட்டிகளை கோபி உதவிக்கலெக்டர் பி.ராமர் தொடங்கி வைத்தார். இறுதி போட்டிகளை தாசில்தார் அன்பு தொடங்கி வைத்தார்.

## வெற்றி பெற்ற அணிகள்

பெண்களுக்கான எறிபந்து போட்டியில் முருகன்புதூர் மற்றும் கொளப்பலூர் அணிகள் மோதின. இதில் முருகன் புதூர் அணி வெற்றி பெற்று 2-வது ஆண்டாக கிராமபுத்துணர்வு கோப்பையை பெற்றது.

கைப்பந்து போட்டியின் இறுதி போட்டியில் சூரியம்பாளையம் மற்றும் பொலவக்காளிபாளையம் அணிகள் மோதின. இதில் சூரியம்பாளையம் அணி வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான கைப்பந்து இறுதி போட்டியில், கூத்தம்பாளையம் மற்றும் ஜி.பாய்ஸ் அணிகள் மோதின. இதில் கூத்தம்பாளையம் அணி வெற்றி பெற்றது.

மேலும் பொதுமக்களுக்கு சாக்கு ஓட்டம், உறி அடித்தல், மெதுவாக சைக்கிள் ஓட்டுதல் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டன.

## பரிசு

போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு, கிராம புத்துணர்வு கோப்பைகளை பாரியூர் வெள்ளாளப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் வேலுமணி, சுவாமி அதிந்ரா ஆகியோர் வழங்கினார்கள். விழாவில் ஈஷா யோக மைய அமைப்பாளர்கள் அருணகிரி, செந்தில்குமார், அர்த்தநாரீஸ்வரன், கண்ணன், செங்கோட்டையன், துரைசாமி, பாலு உள்பட பலர் கலந்து கொண்டனர்.